## (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**ஓ.எஸ்.எண். 78/2014** **நாள்.09.08.2023**

2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 09 ம் நாள் வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துரைராஜ் | தொழில் | |
| த. பெ./க.பெ. | காசி | சாதி | |
| கிராமம் | ஈயகுணம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 50 |

**வ.சா.2**

**குறுக்கு விசாரணை**

**I.** எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியும். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னை சாட்சியம் அளிக்க வாதி அழைத்து வந்தார். மேடுஓவர் எழுதி கொடுத்தது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சண்முகம் மேடுஓவர் எழுதிக்கொடுத்தது தவிர வேறு எந்த விவரங்களும் எனக்கு தெரியாது. மேடு ஓவர் எழுதியதில் நானும், ஆறுமுகமும் சாட்சி கையொப்பம் போட்டோம். ஆறுமுகம் என்பவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். சீனிவாசன் மேடு ஓவர் எழுதியதற்காக சண்முகத்திற்கு பணம் கொடுத்தார். சண்முகம் எனக்கு மாமா உறவு ஆகும். சீனிவாசன் எனக்கு உறவினர் இல்லை. சாட்சி ஆறுமுகத்திற்கு சீனிவாசன் அக்கா மகன் ஆவார். சீனிவாசன் சண்முகத்திற்கு உறவினர் ஆவார். அந்த வகையில் சீனிவாசன் ஆறுமுகத்திற்கு உறவினர் ஆவார். சண்முகம் விவசாய வேலை செய்கிறார். சீனிவாசன் விவசாய வேலை செய்கிறார். அவரை பற்றி முழுமையாக எனக்கு தெரியாது. நான் செஞ்சி கோபால் நாயுடு ஜெராக்ஸ் கடையில் வைத்து சாட்சி கையெழுத்து போட்டேன்.

**II.** வாதி சீனிவாசன் இவ்வழக்கை கணேசன், சின்னகுழந்தை மற்றும் சிலருக்கு எதிராக வழக்கு தாக்கல்செய்துள்ளார். மேடுஓவரில் நான் சாட்சி கையெழுத்து போடும் போது மேற்படி நபர்கள் அந்த இடத்தில் இல்லை. கோபால் நாயுடு என்பவரை கடைசியாக எப்பொழுது பார்த்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 23.06.2014 தேதியில் கோபால் நாயுடு மேடுஓவர் எழுதினார். மேடுஓவரை கோபால் நாயுடு எனக்கு படித்து காண்பித்தார். ஆறுமுகத்தின் தூண்டுதலின் பேரில் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால்

சரியல்ல. ஆறுமுகம் ஊரில் வசதியானவர் என்றால் சுமாராக வசதியானவர். ஆறுமுகம் உள்ளுர் , வெளியூரில் வட்டி தொழில் செய்வார் என்றால் சரியல்ல. கடன் கேட்டபவர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுப்பார். சண்முகம் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்யவில்லை. சண்முகத்திற்கு நிலம் எதுவும் கிடையாது என்றாலும், ஆறுமுகத்திடம் கூலி வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. சண்முகத்திற்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. அது சண்முகத்தின் அப்பா பெயரில் உள்ளது. சண்முகம் மேடுஓவரில் 2 கையெழுத்துக்கள் போட்டார். ஆறுமுகம் ஒரு கையெழுத்து போட்டார். கோபால்நாயுடு ஒரு கையெழுத்து போட்டார். சீனிவாசன் ஒரு கையெழுத்து போட்டார். ஆறுமுகம் வட்டி தொழில் செய்வதால் அவர் பெயரில் வழக்கு போட்டால் பிரச்சனை வரும் என்பதால் வாதி பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், ஆறுமுகம் கேட்டுக்கொண்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.